IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 92/2014

Deposition of Witness : PW 3

Name : சம்பந்த மூர்த்தி (வயது –63 )

Father's Name /W/o : த/பெ சோணாச்சலம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 08.07.2025.

## குறுக்கு விசாரணை

1. நான் எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் பொது அதிகார வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எத்தனை வருடமாக பத்திரம் எழுதுபவராக உள்ளேன் என்றால் 32 வருடம். என் பத்திரம் எழுத்தாளர் என்ற லைசன்ஸ் என்னவென்றால் A/819 AKM/1991. என்னிடம் காட்டப்படும் பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ – 9 நான் எழுதியது என்றால் சரிதான் எந்த வருடத்தில் எழுதினேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. பொது அதிகார பத்திரம் யார் பெயருக்கு எழுதப்பட்டது என்றால் பலராமன் என்பவர் தீனதயாளன் என்பவர் பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டது. பொது அதிகார பத்திரம் ஆவண எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ – 9 ஆவணத்தில் எத்தனை பேர் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் 2 பேர். யார் யார் சாட்சியம் அளித்தார்கள் என்றால் பெயர் என்னவென்றால் பலராமன் மற்றும் பாரதி.

3. பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ – 9 இல் உள்ள சொத்து எங்கே உள்ளது என்றால் ஆத்தூர் கிராமம் சர்வே எண்.340/2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 9 ஆவணத்தில் அன்வர் பாஷா என்பவரின் சாட்சி கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு வா.சா.ஆ – 9 ஆவணம் எந்த தேதியில் எழுதினேன் என்று தெரியாது மற்றும் ஆவண எண் தெரியாது என்ற காரணத்தினால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.